# இலங்கை வடமாகாண முஸ்லிம்களின் நிலை

அஷ்ஷைக் எம்.ஏ.ஹபீழ் ஸலபி,ரியாதி (M.A)

**இலங்கை வட மாகாணத்திலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு, இம்மாதம் இறுதி வாரத்துடன் 30 வருடங்கள் நிறைவடைகின்றன. முஸ்லிம்களின் வெளியேற்றம் தொடர்பாக 1996 களில் நான் தாருத் தவ்ஹீத் அஸ்ஸலபிய்யாக் கலாபீடத்தில் கல்வி கற்றுக் கொண்டிருந்த போது, தென்னிந்தியாவிலிருந்து வெளிவந்துகொண்டிருந்த அல் முபீன் மாத இதழிற்கு நான் எழுதிய கட்டுரை இது. அப்போது, சகோ.கே.எம்.முஹம்மது முஹைத்தீன் உலவி அவர்கள் ஆசிரியராக செயற்பட்டார். அவரின் முற்குறிப்போடு இக்கட்டுரை பிரசுரமானது. அக்குறிப்போடு, எனது கட்டுரையில் சிறிய மாற்றத்துடன் இஸ்லாம் கல்வியில் தற்போது வெளியிடப்படுகிறது. சகோ.கே.எம்.முஹம்மது முஹைத்தீன் உலவி அவர்களுக்கும் அல் முபீன் மாத இதழிற்கும் இஸ்லாம் கல்வி இணையதளத்திற்கும் எனது நன்றி உரித்தாகட்டும்.**

*(இலங்கையின் வடக்கு மாகாணப்பகுதியின் எல்.டி.டி.ஈ. எனும் தீவிரவாதிகளால் முஸ்லிம்கள் கடும் பாதிப்புக்குள்ளாகி உள்ளனர். இந்த மோசமான நிலையினை நான் இலங்கை சென்றபோது, நேரில் கண்டேன். விதவைகளும், அநாதைகளும், ஊனமுற்றோரும் அங்குள்ள முஸ்லிம்களில் அதிகம். ஓலை குடில்களில் அவர்கள் படும் அவஸ்தையான வாழ்க்கை கல் நெஞ்சர்களையும் கரையச்செய்யும்.*

*முஸ்லிம், கிருத்தவர், இந்து, கடவுள் இல்லை என்போர் ஆகியோர் எவராயினும் தமிழ் பேசினால் அவர்கள் தமிழர்களே என்பது தமிழ்நாட்டின் நிலை. தமிழ்போசும் முஸ்லிமல்லாதவர்கள் மட்டுமே தமிழர்கள் என்ற நிலையை விடுதலைப்புலிகள் ஏற்படுத்தி விட்டனர் இலங்கையில் இலங்கை கொடுமைபற்றி கட்டுரையாளர் விவரித்துள்ளார். கட்டுரையாளர் 17 வயதே நிரம்பியவராவார். சென்ற இதழில் “தொடுவானில் புதியதொரு எழுச்சி” என்று கட்டுரையை எழுதியவரும் இவரே! விடுதலைப்புலிகளை ஆதரிக்கும் தமிழ்நாட்டு முஸ்லிம்களுக்கு இக்கட்டுரை படிப்பினை தரும். ஆசிரியர்)*

இலங்கையில் பொதுவாக வடகிழக்கில் வாழ்கின்ற முஸ்லிம்களின் சரியான நிலைகுறித்த இந்திய வாழ்தமிழ் பேசும் முஸ்லிம்களுக்கும் முஸ்லிம் அல்லாத மனித நேயமுள்ள தமிழ்ப் பேசும் மக்களுக்கும் தெரிவிப்பது அவசியம் என்பதால் இக்கட்டுரையை வரைகின்றேன்.

ஆரம்ப காலத்தில் அரசுப் படைகளுக்கும் தமிழ் போரரட்டக் குழுக்களுக்குமிடையிலான போராட்டம் 1983ம் ஆண்டுதான் முதன் முதலாக ஆரம்பித்தது. முஸ்லிமிகள் தமிழர் - பவ்த்தர் ஆகிய இவ்விரு பகுதியினராலும் சிறிதளவான பாதிப்புக்கு உள்ளானர்கள். 1985ம் ஆண்டு முதல் வடகிழக்கில் வாழ்ந்த முஸ்லிம்கள் பல வழிகளிலும் தாக்கப்பட்டனர். அழிவை ஏற்படுத்தும் அர்த்தமற்ற இந்த யுத்தத்தினால் பல ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் பாதிப்புக்குள்ளாக்கப்பட்டனர். வடக்கில் வாழ்ந்த முஸ்லிம்கள் தமிழ் ஆயுதக் கும்பல்களினால் நசுக்கப்பட்டனர். காலத்துக்குக் காலம் முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்ட அடக்கு முறைகளும், தாக்குதல்களும், கொலைகளும், கொள்ளைகளும், பலாத்காரமும், சுதந்திரமின்மையும் முஸ்லிம்களை முற்றாக அழித்துவிட எடுத்த முதல் முயற்சியாகவே இருந்தது. இறுதியில் வடக்குப் பகுதியிலிருந்து அடித்துத்துறப்பட்டனர்.

இலங்கையின் வட பகுதி முஸ்லிம்கள் அவர்கள் பரம்பரை பரம்பரையாக சுமார் ஆயிரம் வருடங்கள் வாழ்நது வந்த இடங்களை விட்டு ஆயுதமுனையில் பலவந்தமாக உடமைகள், உரிமைகள் பறிக்கப்பட்ட நிலையில் அணிந்திருந்த ஆடையுடன் எல்.டி.டி.ஈ யினரினால் மனிதாபிமானமற்ற முறையில் வெளியேற்றப்பட்டு இன்றுவரை 30 ஆண்டுகளை எய்திவிட்டது. இக்கீழ்த்தரமான சம்பவம் இலங்கையின் வரலாற்றில் குறிப்பாக தமிழ் மக்களது வரலாற்றில் கறை படிந்த சோக நிகழ்வொன்றாகும்.

1990 அக்டோபர் 23ம் திகதியில் வெளியேற்றப்பட்ட சுமார் 75000 முஸ்லிம்களே இவ்விழிநிலைக்குள்ளாக்கப்பட்டனர். மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவுப் பகுதி முஸ்லிம்களே இவர்கள். இன்றுவரை போதுமான அடிப்படை வசதிகள் (உணவு, உறையுள், உடை, கல்வி, மருத்துவம், நீர், மின்சாரம்) போன்ற வசதிகளற்ற துயரங்களுடன் இலங்கையின் பல்வேறு மாவட்டங்களில் வாழ்ந்து வருவதைக் காணலாம்.

ஏன் இவ்வாறு எல்.டி.டி.ஈ யினர் முஸ்லிம்களை வெளியேற்றினர் என்றால், தமிழர்களுக்கு, முஸ்லிம்கள் அநியாயம் செய்தார்களா? இல்லை. அவர்களுடன் கைகோர்த்து நண்பர்களாக, அவர்களுக்கு உதவி செய்துகொண்டு, தமிழ் மக்களுடன் சேர்ந்து தொப்புல் கொடி உறவுகள் போன்று வாழ்ந்துகொண்டிருந்தார்கள்.

1990 அக்டோபர் 18ம் திகதி சாவகர்ரேரிப்பகுதியில் வசித்து வந்த 50க்கும் மேற்பட்ட முஸ்லிம் குடும்பங்கள் அவர்களின் அனைத்து சொத்துக்களும் பறிமுதல் செய்யப்பட்ட நிலையில் வெளியேறுமாறு பணிக்கப்பட்டனர். ஆயுதம் தாங்கிய புலிகளின் வேண்டுகோளுக்கு அஞ்சிய முஸ்லிம்கள் சொத்துக்களை அப்படியே விட்டுவிட்டு அணிந்திருந்த ஆடையுடன் வெளியேறினர். இவ்வாறு வடக்கின் எல்லாப்பகுதிகளிலும் உள்ள பள்ளிவாசல்களில் ஒலிபெருக்கி அன்று முஸ்லிம்களுக்கு எதிராகவே பயன்படுத்தப்பட்டது. இவ்வாறு தமது வீடுகள், கிராமங்கள், நகரங்களை விட்டு வெளியேறியோர் தமது பெறுமதிமிக்க சொத்துக்களையும் உடமைகளையும் அந்தந்த இடங்களிலேயே விட்டுச் செல்லுமாறும் மீறுவோர் பகிரங்கமாக சந்தியில் வைத்து சுட்டுக் கொல்லப்படுவர் என்றும் ஆயுத முனையில் மிரட்டினர்.

இவ்வாறு, வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் ஆங்காங்கே பல மாவட்டங்களில் குடியேறினர். 1990 நவம்பர் 2ம் திகதி வடமாகாணத்தில் முஸ்லிம்களின் தொகை பூஜ்யமாகும். ஆனால், புலிகளினால் பணத்துக்காகவும் வேறு அவர்களின் இலாபங்களுக்காகவும் பிடித்து தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த 55 முஸ்லிம்கள் அங்கிருந்தனர். அதில் 22 பேர் ஒன்றரை வருடத்தின் பின்னர் சிலர் 6 மாதத்தின் பின்னர பல இலட்சம் ரூபா பணம் கப்பபம் பெறப்பட்டு, விடுவிக்கப்பட்டனர். ஏனைய 33 பேரின் நிலைமைகள் பற்றியோ அவர்கள் உயிருடன் உள்ளார்களா? என்ற விபரங்கள் எதுவும் இன்று வரை கிடைக்கவில்லை.

வடமாகாணத்தில் முஸ்லிம்கள் 10 நூற்றாண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் மனிதாபிமானமற்ற முறையில் வெளியேற்றப்படும் வரை இந்தப் பிரதேசங்களில் வாழ்ந்த முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் இடையிலான உறவு மிகவும் அந்நியோன்யமாகவே காணப்பட்டது. இன்றும் கூட தமிழ் மக்கள் எமது விரோதிகளல்லர், புலிகள் தான் முஸ்லிம்களுக்கு அநீதி இழைத்து விட்டனர் என்று முஸ்லிம்கள் கூறுவதை எம்மால் செவிமடுக்க முடிகிறது.

இந்த வெளியேற்றம் எந்த வகையிலும் நியாயமற்றது. வடமாகாண அப்பாவி முஸ்லிம்களின் பெறுமதிமிக்க பொருள்களும் சொத்துகளும் அதற்கு மேலாக சிலரின் உயிர்களும் ஆயுத முனையில் பறிக்கப்பட்டன. எந்த வகையிலும் மனித சிந்தனை ஏற்றுக் கொள்ளாத அளவு குறிப்பிட்ட இரண்டு மணி நேரத்தில் வெளியேறும் படி கூறியது எமக்கு எவ்வளவு ஆத்திரத்தை ஏற்படுத்துகிறது. முஸ்லிம்கள் தம்முடன் எந்த ஒரு பெறுமதி மிக்க பொருளையும் எடுத்துச் சென்று விடக்கூடாது என்பதற்காக முஸ்லிம் பிரதேசங்களின் வெளியேறும் வாயில்களில் முஸ்லிம் பெண்களும் ஆண்களும் சிறுவர் சிறுமியர்களும் முதியவர்களும் ஆயுத முனையில் சோதனையிடப்பட்டனர்.

புல வருடங்கள் நூற்றுக்கணக்கான பள்ளிவாயில்கள் அதான் ஒலிபரப்பின்றி பாழ் அடைந்து கிடந்தன. இவர்கள் வாழ்ந்த பிரதேசங்கள் வெறும் வனாந்தரமாகக்கிடக்கின்றன. சில வீடுகளில் தமிழ் மக்கள் குடியேற்றப்பட்டுள்ளனர். வடக்கில் செல்வச் செழிப்புடன் அதிகமான சொத்துக்களுக்கு அதிபதியாக இருந்த முஸ்லிம்கள் இன்று பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டு தமது உறைவிடம், கல்வி, கலாசாரம், சுகாதாரம், ஒழுக்கம் ஆகியன பாதிக்கப்பட்ட நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றர்கள்.

பாஸிச வெறியர்களினால் இலங்கை முஸ்லிம்கள பாதிக்கப்பட்டவர்களாக இருக்கும் போது, இந்தியா வாழ் தமிழ்ப்பேசும் முஸ்லிம்கள் இந்தப்பிரச்சினை பற்றி தெளிவான அறிவின்றி, பாசிசப் புலிகளை ஆதரிப்பதை நாம் காணும் போது, மனம் வேதனையடைகிறது.

புலிகள் இயக்கத்தினர் சமாதனத்திற்கான வழியை நிராகரித்து கொரில்லா முறையில் அரசுப் படைகளையும் மிக முக்கியமான இடங்களையும் தாக்கி வந்தனர். புலிகள் தமிழனின் உரிமைக்காக போராடினார்கள் என்று வெளி உலகம் நினைக்கிறது. ஆனால், புலிகள் இயக்கத்தினர் தமிழர்களுக்கே எதிரானவர்கள் என்பதற்கு பல ஆதாரங்கள் உள்ளன.

முன்னாள் இலங்கை ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க ஆட்சிக்கு வந்தபோது, எல்.டி.டி.ஈ இயத்தை சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அழைத்தார். ஆனால், அவர்கள் மறுத்து பேச்சுவார்த்தையை பிரயோசனமற்றதாக மாற்றினார்கள்.

ஆனால் இந்த இயக்கம் நியாயத்திற்காகப் போராடுகிறது என்ற எண்ணத்தில் தமிழன் கொடுமைப்படுத்தப்படுகிறான் என எண்ணி, அண்மையில் தீக்குளித்த தமிழகத்தைச் சேர்ந்த தஸ்கீர் போன்ற அறிவிலிகளை நினைக்கும்போது மிகவும் பரிதாபகரமாகவுள்ளது. இவர் இலங்கையில் நடப்பது பற்றி உண்மைகளைத் தெரிந்திருந்தால் தனது மேனியிலே மண்ணெண்னை ஊற்றி தன்னையே பற்றவைத்து தற்கொலை பண்ணும் அளவுக்கு தள்ளப்பட்டிருக்கமாட்டார்.

ஆனால், இங்கு நடந்தபதோ வேறு. ஆந்தப்பக்கங்களைப் புறட்டினால், கறைபடிந்த ரத்தவரலாறுதான் தென்படும். பயங்கரவாதிகளினால் பள்ளியில் தொழுது கொண்டிருக்கும் போது, “அளவக்கை” என்னுமிடத்தில் மூன்று முஸ்லிம்கள் சுட்டுக்கொலை செய்யப்பட்டார்கள். இன்னும், தந்திக்கம்பியிலே அபுல் என்ற சகோதரர் கட்டிவைத்து சுட்டுக்கொல்லப்பட்டார். இது 85ம் ஆண்டு நடைபெற்ற சம்பவம் பரிதாபம்… இதை அறியாத தஸ்தகீர் போன்றவர்களும் பயங்கரவாத ஆதரவாளர்களும் தங்கள் தலைகளிலே தங்கள் கைகளினால் மண்தூவிக் கொள்கின்றார்கள்.

இது மாத்திரமா? தூங்கிக் கொண்டிருந்த கிழக்கு ஏறாவூரில் அப்பாவிப் பொதுமக்கள், சிறுவர்கள், யுவதிகள், முதியவர்கள் கண்டதுண்டமாக, ஈவிரக்கமின்றி வெட்டிக்கொன்று குவிக்கப்பட்டனரே! இவ்வளவு தானா? காத்தான்குடி பள்ளியில் தொழுது கொண்டிருந்த நூற்றுக்கும் அதிகமான வாலிபர்கள், முதியவர்கள், சிறுவர்கள் குண்டு வீசித் தாக்கப்பட்டனரே! பள்ளியே இரத்த வெள்ளத்தில் குளித்தது. இவ்வாறு தமிழீழ இனவெறியர்கள் செய்த அடாவடித்தனத்தை பட்டியலிட்டால் பல நூறு பக்கங்கள் எழுத முடியும்.

இலங்கையில் முஸ்லிம்களுக்கு நடப்பது என்ன? நடந்திருப்பது என்ன என்பது பற்றித் தெளிவாக இந்திய மக்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்பில், இலங்கை முஸ்லிம்கள் உள்ளனர்.

83ம் ஆண்டு, அதாவது வரலாற்றில் கருப்பு ஜுலை என்று வரலாற்றில் அறியப்பட்டுள்ள அந்த நாள் காரணமாக கொதித்தெழுந்த தமிழ் வாலிபர்கள் பல இயக்கங்களாக ஆயுதக் குகழுக்களாக செயற்பட்டார்கள். இவ்வியக்கங்கள் சிங்களவர்களை வெளியுலகிற்கு மிலேச்சர்கள் என்று காட்டினார்கள். இவ்வாறு பல இயக்கங்கள் ஆரம்பத்தில் தமிழ் மக்களின் உரிமையை வென்றெடுப்பதற்காக என்று ஆரம்பித்து, காலம் செல்லச் செல்ல இவ்வியக்கங்கள் தமிழர்களுக்கு எதிரானதாகவே செயற்பட்டது. தமிழ் வாலிபவர்களை கொன்றுகுவித்தது. கோயில்களில் இரவு வேளையில் புகுந்த கோயில் சொத்துக்களை சூரையாடியது. பணக்காரர்களிடம் பலவந்தமாக அவர்களின் சொத்தைப் பறித்தெடுத்தது.

தமிழ்ப் பயங்கரவாதிகள் சுதந்திர தாகம்கொண்டவர்கள் தமிழர்களின் உரிமைக்காகப் போராடுகின்றவர்கள் என்று பலரும் நினைத்தார்கள். தமிழர்களுடன் ஒற்றுமையாக வாழ வேண்டுமென்று நினைத்த வடமாகாண முஸ்லிம்களை விரட்டியடித்தது எந்தவகையில் நியாயம்? உதவியும் ஒத்தாசையும் புரிந்து கொண்டிருந்த அப்பாவிகளை - முஸ்லிம்களை தயவு தாட்சண்யமின்றி பிறந்த மண்மை விட்டு விரட்டி விட்டனர். இது புலிகளின் கோழைத்தனத்தை நிரூபிக்கின்றது.

ஈழ முஸ்லிம்களின் சோக நிலையின் சுருக்கமே இது. இந்த நிலை இந்திய முஸ்லிம்களுக்கு படிப்பினை தரட்டும்!